**தலைப்பு 276 – பதுளை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 276 பதுளை மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஜூலை 05 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

பதுளை மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 735.55 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 710.76 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 24.79 மில்லியன் அதாவது 3.37 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டுவருபவை | 617.55 | 612.98 | 4.57 | 0.74 |
| மூலதனம் | 118.00 | 97.78 | 20.22 | 17.14 |
| மொத்தம் | 735.55 | 710.76 | 24.79 | 3.37 |

(ஆ) **ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்டச் செயலகத்திற்கு 24 அமைச்சுக்கள் மற்றும் 17 திணைக்களங்களினால் முறையே ரூபா 2.,103.34 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 1,979.74 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 123.60 மில்லியன் கூட்டுத்தொகை அதாவது 5.88 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

பதுளை மாவட்ட செயலகத்திற்குரிய 27601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 45.73 | 39.81 | 33.73 | 39.23 | 156.00 | 129.27 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

பதுளை மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலக்கம் 7002/0000/00/0315/0015/000 கொண்ட கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 104.81 ஆகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

பதுளை மாவட்ட செயலகத்தில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 469.23 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0058/000 | 0.72 |
| 6000/0000/00/0002/0076/000 | 0.23 |
| 6000/0000/00/0013/0047/000 | 38.47 |
| 6000/0000/00/0016/0028/000 | 307.33 |
| 6000/0000/00/0017/0007/000 | 121.78 |
| 6000/0000/00/0018/0035/000 | 0.70 |
| மொத்தம் | 469.23 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

பதுளை மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

#### 3.1.1 பாதீட்டு முரண்கள்

04 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அச் செலவு விடயங்களுடன் தொடர்புடைய தேறிய ஏற்பாடுகளில் 14 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையான வீச்சு அளவினை கொண்டிருந்தது.

#### 3.1.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள்

பல்வேறு செயற்பாடுகளுக்காக அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தியமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இருந்து பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கியிருந்த ஏற்பாடுகளினைப் பயன்படுத்தியமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 07 பிரதேச செயலகங்களில் 2015 ஆண்டின் போது செயற்படுத்திய 44 அபிவிருத்திச் செயற்திட்டங்களின் மதிப்பீடுகள் தயாரிக்கும் போது வீதி கூறுவிலை (HSR) இன் பிரகாரம் பிழையற்ற ரேட்கள் மற்றும் அளவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக பிழையான கணக்கெடுப்புக்கள் மற்றும் போலியான கிரயங்களை உட்படுத்தி குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,508,343 தொகை ஒன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 04 பிரதேச செயலகங்களில் 04 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக போலியான அளவைகள் மற்றும் மேற்கொள்ளப்படாத விடயங்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 257,319 தொகை ஒன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) 03 பிரதேச செயலகங்களில் ரூபா 4,632,819 இற்கான முடிவுற்ற வேலை பெறுமதியினை கொண்ட 05 கொங்கிரீட் பாதைகளின் கொங்கிரீட்களின் பலத்தினை அளவிடும் கருவியின் பிரகாரம் குறைந்த பட்ச நியம பெறுமதியினையும் பெற்றிருக்காத கொங்கிரீட் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 1,420,544 தொகை ஒன்று கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(iv) ஹல்தும்முள்ள பிரதேச செயலகத்தினால் 14 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 41,280 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு மிகையாக செலுத்தப்பட்டிருந்த பணத்தினை 2016 ஆகஸ்ட் 19 திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(v) ரிதீமாலியத்த பிரதேச செயலகத்தினால் 2014 ஆண்டிற்கான செயற்திட்டங்கள் செயற்படுத்தும் போது மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக ரூபா 157,422 தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய அலுவலர்களிடம் அப் பணத்தினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) ஹப்புத்தலை பிரதேச செயலகத்தினால் 2014 ஆண்டின் போது செயற்படுத்திய ரூபா 16,317,942 இற்கான மதிப்பீட்டு பெறுமதியினைக் கொண்ட 07 கட்டிட நிர்மாண வேலைகள் தொடர்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் சுற்று நிருப ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சு**

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்காக ரூபா 20,000 இற்கான போசாக்கு உணவுப் பொதி ஒன்று வழங்கும் நிகழ்ச்சி திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பதுளை, மஹியங்கனை மற்றும் ஸொரணாதொட பிரதேச செயலகங்களினால் மாவட்ட பெறுகைகள் குழுவின் தீர்மானத்தை பெறுவதற்கு முன்னர் பிரதேச பெறுகைகள் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களினால் உணவுப் பண்டங்கள் பெறப்பட்டுள்ளன.

(ii) பதுளை மற்றும் மஹியங்கனை பிரதேச செயலகங்களினால் பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளாமல் உணவுப் பண்டங்கள் வழங்கிய 2,308 கூப்பன்களுக்காக ரூபா 630,854 தொகை வழங்குனர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது

(iii) பதுளை, வெலிமட மற்றும் ஊவபரணகம பிரதேச செயலகங்களினால் விதப்புரைக்கப்பட்ட உணவு வகைகளுக்கு பதிலாக நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவு பண்டங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(iv) 2015 மார்ச் 19 திகதிய இலக்கம் 1906/47 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் குறிப்பிடப்பட்டுள்ள கூறுவிலைகளை விட கூடுதலான பெறுமதியுடைய கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்த வழங்குனர்களுக்கு சொரணாதொட பிரதேச செயலகத்தின் பிரதேச பெறுகைகள் குழு அங்கீகாரத்தினை வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் குறிப்பிட்ட வழங்குனர்களுக்கு ரூபா 208,088 இற்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(v) பெறுகைகள் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூறுவிலைகளை விட கூடுதலான விலை அறவிடப்பட்டமையின் காரணமாக வெலிமட மற்றும் ஊவபரணகம பிரதேச செயலகங்களினால் ரூபா 162,019 தொகை குறிப்பிட்ட வழங்குனர்களுக்கு மிகையாகச் செலுத்தியிருந்தது.

**(இ) இலங்கை சமூர்த்தி அதிகாரசபை**

இலங்கை சமூர்த்தி அதிகாரசபையினால் வழங்யிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தியமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பண்டாரவெல, ஊவபரணகம, எல்ல, பதுளை மற்றும் சொரணாதொட பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 13 சமூர்த்தி வங்கிச் சங்கங்கள் மற்றும் 03 சனசமூக அடிப்படை வங்கிகளினால் 2007 மற்றும் 2013 ஆண்டு வரை வாழ்வாதார அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக வழங்கியிருந்த கடன் தொகைகளில் 1263 நலன்பெறுவோர்களிடம் ரூபா 3,806,722 தொகை ஒன்றினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ii) பதுளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கெந்தகொல்ல வாழ்வின் எழுச்சி சனசமூக அடிப்படை வங்கியினால் 2014 ஆண்டின் போது வழங்கியிருந்த பட்டவிரு வீட்டுக் கடன்களில் 2015 ஒக்டோபர் 30 ஆந் திகதி அளவில் தொடர்ச்சியாக 09 தவணைகள் செலுத்தாத 07 நலன்பெறுவோரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 573,660 கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.2 பொது வைப்புக் கணக்குகள்**

2015 திசெம்பர் 31 திகதி வரை 02 வருடங்களை விஞ்சிய ரூபா 196,727,221 கூட்டுத்தொகையான இற்கான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

**3.3 அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

விடய இலக்கம் 27601 கொண்ட அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,969,182 ஆகக் காணப்பட்டதுடன், அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் 01 வருடம் முதல் 22 வருடங்கள் வரையான கால வீச்சில் காணப்பட்ட போதிலும், அவற்றை அறவீடு செய்திருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகக் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட வேவத்தை பன்ஸல கிணற்றின் மூலம் குடிநீர் வழங்கும் செயற்திட்டம் 2015 ஜுன் 15 திகதி ரூபா 1,908,808 தொகை செலவிடப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 03 திகதி வரையும் நலன்பெறுவோருக்கு குடிநீர் வழங்கியிருக்கவில்லை.

(ii) மாவட்ட செயலகத்தைச் சேர்ந்த 07 வாகனங்கள் 09 மாதம் முதல் 07 வருடங்கள் வரையான கால வீச்சில் திருத்தப்படாமல் அலுவலக வளவில் பயன்படுத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துதல்**

மஹியங்கனை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக 2014 மெய்மையாய்வு சபை பரிந்துரையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

### 3.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா. | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 104(4) | 3,056,306 | நட்டங்கள், சேதங்கள் ஏதும் ஏற்பட்ட திகதியில் இருந்து 3 மாதங்கள் முடிவடையும் முன்னர் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும் 13 சேதங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. அநேகமான முழுமையான அறிக்கைகளில் குறிப்பிட்ட அதிகாரிகளின் கையொப்பத்துடன் உத்தியோக முத்திரை மூலம் சான்றுபடுத்தியிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 396(ஈ) | 6,288,871 | பதுளை மாவட்ட செயலகத்தினால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலம் கடந்துள்ள காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) பொது நிருவாக சுற்று நிருபம்** | | |
| 2011 ஜுன் 29 திகதிய இலக்கம் EST7/ TRAVEL/060/3030 கொண்ட பொது நிருவாக மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சுச் செயலாளரின் கடிதம் | 228,021 | பதுளை மாவட்டச் செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களின் கணக்காளர் பதவிகளில் பதில் கடமையாற்றியதற்காக இணைந்த படி பெற்றிருந்தனர். |

### 3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை மற்றும் செயற்திட்டங்கள் மேற்கொள்வதில் காணப்பட்ட தாமதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடல்**

மீளாய்வாண்டின் போது பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்க வேண்டியிருந்த போதிலும், வருட இறுதி வரை அச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

| | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (i) | லூணுகல பிரதேச செயலகத்தினால் குருவிகொல்ல படவத்த பகுதிக்கு குடிநீர் வழங்கள் | 200,000 | நீரேந்து பிரதேசம் கோடை காலங்களில் வற்றுவதன் காரணமாக செயற்திட்டம் வெற்றியளிக்காமை. |
| (ii) | சொரனாதொட பிரதேச செயலகத்தினால் சார்னியா கொடிலன்ட் பகுதியில் கோயிலின் திருத்த வேலை | 499,767 | பிரதேச செயலகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டின் வேலைப் பகுதிகள் மாகாண சபை ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டமையால் மீண்டும் மதிப்பீடு திருத்தப்பட்டு செயற்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சின் அங்கீகாரத்தை வேண்டிய போதிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |
| (iii) | ஹாலிஎல பிரதேச செயலகத்தினால் ஸ்பிரிங்வெலி 04 வது பகுதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் | 200,085 | அதிக மழை காரணமாக வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக போதியளவான கால அவகாசம் காணப்படாமை |
| (iv) | ஹல்துமுள்ள பிரதேச செயலகத்தினால் பூனாகல கீழ் பகுதி கோயில் கட்டிடம் நிர்மாணித்தல் | 499,860 | அதிக மழை மற்றும் வேலையை பூர்த்தி செய்வதற்காக போதியளவு காலம் போதியதாக இல்லாமை. |

**(ஆ) செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடல்**

மாவட்ட செயலகத்தினால் பதுளை சேனாநாயக திடலில் நிலத்தின் கீழ் வாகனத் தரிப்பிடமொன்று நிர்மாணித்து அதன் மீது பூந்தோட்டம் ஒன்று அமைத்தல் மற்றும் தற்போது காணப்படும் பூந்தோட்டத்தை பாதுகாக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 66,466,296 இற்கான மதிப்பீட்டுப் பெறுமதிக்கு 2013 திசெம்பர் 15 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 25,000,000 தொகையொன்று கொடுப்பனவு செய்திருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 திகதி வரை அச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயற்திட்டங்கள் மேற்கொள்வதில் தாமதம்**

கீழ்வரும் செயற்திட்டங்கள் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்வதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டு பெறுமதி | ஆரம்பிக்கப் பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | 2015.12.31 திகதி வரை செலவு | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | | | ரூபா | |
| **ரிதீமாலியத்த பிரதேச செயலகம்** | | | | | |
| சங்கபோபுர விவசாய அமைப்பு களஞ்சியம் ஒன்று நிர்மாணித்தல் | 980,000 | 2015.10.09 | 2015.12.25 | 796,591 | அதிக மழை |
| வெலம்பல சனசமூக நிலையம் நிர்மாணித்தல் | 980,000 | 2015.09.28 | 2015.12.28 | 566,355 | அதிக மழை |
| அரளுபிட்டிய முன்பள்ளி நிலையம் நிர்மாணித்தல் | 980,000 | 2015.09.18 | 2015.12.28 | 196,000 | அதிக மழை மற்றும் ஒப்பந்த சங்கத்திற்கு போதியளவு ஆளணி இன்மை |
| சிறுநீரக நிவாரணத்திற்காக பாடசாலை நீர் செயற்திட்ட நிகழ்ச்சித் திட்டம் | 8,368,200 | 2015.07.21 | 2015.12.25 | 5,251,641 | பெறுகைகள் தீர்மானங்கள் காணப்படாமை |
| **மஹியங்கனை பிரதேச செயலகம்** | | | | | |
| வேவத்தை மொரகெட்டிய சனசமூக நிலையம் நிர்மாணித்தல் | 980,000 | 2015.09.02 | 2015.12.15 | 574,855 | மிகை மழை |
| சிறுநீரக நிவாரணத்திற்காக பாடசாலை நீர் செயற்திட்ட நிகழ்ச்சித் திட்டம் | 16,852,000 | 2015.07.21 | 2015.12.25 | 7,846,458 | பெறுகைகள் தீர்மானங்கள் காணப்படாமை |
| ஊவபரணகம பிரதேச செயலகம் | | | | | |
| வேதலாவ மெத முகலான ஊடாக கொட முகலான வரை பாதைக்கு மதகு போட்டு அபிவிருத்தி செய்தல் | 980,000 | 2015.08.26 | 2015.11.26 | 211,942 | அதிக மழை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சனசமூக நிலைய கட்டிடம் மற்றும் சேவை இல்லம் நிர்மாணித்தல் | 980,000 | 2015.10.21 | 2015.11.30 | 745,040 | அதிக மழை |
| ப/ துப்பிட்டிய வித்தியாலயத்தின் நீர் செயற்திட்டத்தினை அமுல் நடாத்துதல் | 519,000 | 2015.12.02 | 2015.12.23 | 134,752 | அதிக மழை |

**3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**அரச பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறைகளில் இருந்து விலகல்**

பண்டாரவெல பிரதேச செலயத்தினால் ரூபா 39,900 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 142,200 பெறுமதியான அறநெறிப் பாடசாலை உபகரணங்கள் பெற்றுக்கொள்ளும் போது 2006 பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறை கோவையின் 5.6.1 வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

**3.9 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணியின ர் | உள்ளபடியான பதவியணியின ர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை க |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 53 | 38 | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 44 | 22 | 22 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,099 | 988 | 111 |
| (iv) | ஆரம்ப நிலை | 139 | 137 | 02 |
| | மொத்தம் | 1,335 | 1,185 | 150 |

மீளாய்வாண்டு இறுதி வரை 150 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் 2015 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டு கணக்கின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்த போதிலும், அச் சேமிப்புகள் தொடர்பாக பதவியணியில் வெற்றிடங்கள் காணப்பட்டமை தாக்கமளித்திருக்கவில்லை. இதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மிகை மதிப்பீடு செய்தல் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.